# நடைபயிலும் முன்னே கொடையளிக்கப் பயின்ற கொற்றவர்

கொடையளிப்பதென்பது இடையில் ஏற்படும் பண்பு அல்ல வழிவழியாய் பரிணாமக் கொள்கைப்படி வருவது. ஆம் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்வராக இருந்து இனம், மதம், சமூகம் என்று பிரிந்திருந்து வாழும் அனைத்து மக்களும் பயன் பெறும் வண்ணம் கொடையாக திட்டங்கள் தந்ததில் முத்தமிழறிஞர் கலைஞருக்கு இணை சொல்ல எவருமே இல்லை.

சத்துணவு தந்தார் எம்.ஜி.ஆர். அதுவும் அவர் சிந்தையில் உதித்தப் புதிய திட்டமல்ல நீதிக்கட்சி காலத்திலேயே தரப்பட்ட திட்டம் பின்பு பெருந்தலைவர் காமராசர் ஆட்சி காலத்தில் மதிய உணவு திட்டமாக மலர்ந்த திட்டம் தான்.

ஆனால் அந்த சத்துணவு திட்டத்தில் சத்துணவு என்று பெயர் இருந்தால் போதுமா என்று சிந்தித்து அது மாணவ கண்மணிகளுக்கு உண்மையான சத்துணவாக இருந்திட வாரமெல்லாம் முட்டை வழங்கி அதை சாப்பிடாத சைவ மாணவர்க்கு வாழைப் பழமும் தந்தவர் தலைவர் கலைஞர். இதற்குப் பெயர் தான் கொடை.

மனிதர்களில் கடைக்கோடியில் இருக்கக்கூடியவர் பிச்சைக்காரர்கள். அந்தப் பிச்சைக்காரர்கள் தம் நாட்டில் இருக்கக் கூடாது என்று சில நாடுகளில் அவர்களை சுட்டுக் கொல்கின்றனர். அதற்கு சரியான சான்று இட்லர். ஆனால் மனித நேயத்தோடு அந்தப் பிச்சைக் காரர்களையும் மதித்து அவர்கள் மறுவாழ்வுக்கு திட்டம் தந்தவர் உலகிலேயே கலைஞர் அவர்கள் மட்டும் தான். இதற்குப் பெயர் தான் கொடை.

ஆண்டாண்டு காலமாய் ஆணுக்குப் பெண் அடிமையாகவே இருக்க பிறந்தவர்களா? அல்ல! அல்ல! அவர்களுக்கும் 1929ல் சொத்தில் சமபங்கு கொடுக்க வேண்டு மென்று கோரினார் கலைஞரின் ஆசான் தந்தை பெரியார். அவரது கோரிக்கையை மனதில் வைத் திருந்த தலைவர் கலைஞர் அறுபது ஆண்டுகள் கழித்து 1989ல் முதல்வராக இருந்தபோது பெண்களுக்கு சொத்தில் சமபங்கு உண்டு என்று சட்டம் கொண்டு வந்தார். இன்று சொத்தில்லாத பெண்களே இல்லை.

தந்தை பெரியார் மறைந்து பதினாறு ஆண்டுகள் கழிந்த பின்னும் அவர் கனவை நிறைவேற்றி காட்டிய பெருந்தகையாளர் தான் கலைஞர். இதற்குப் பெயர் தான் கொடை.

இப்படி மக்களுக்கு பயன்தரும் திட்டங்களைப் பார்த்து பார்த்து சிந்தித்து மக்களில் ஒருவராக ஒன்றிப்போய் எண்ணற்ற திட்டங்களை மக்களுக்கு வழங்கிய கொடையாளி தான் முத்தமிழறிஞர் கலைஞர்.

இந்திய அளவிலும் பல பிரதமர்களை உருவாக்கி அவர்களின் மூலமாகவும் பல திட்டங்களை வரவைத்தவர் தலைவர் கலைஞர். மன்னர் குடும்பத்தில் பிறந்தாலும் தன் சொத்துக்களையெல்லாம் நாட்டுக்கும் மக்களுக்கும் தந்த மாமனிதர் வி.பி.சிங் அவர்களிடம் கூறி மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த காரணமாக இருந்தவர் தலைவர் கலைஞர். அதனால் பயன் பெற்றவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள். இப்படி ஓரங்கட்டப்பட்டிருந்த பிற்படுத்தப்பட்ட மக்களையும் உயர வைத்து பார்த்த கொடைவள்ளல் தான் கலைஞர் அவர்கள்.

இன்றோ அவரது அன்பிற்கினிய புதல்வர் ஆற்றல்மிக்க செயல்வீரராய் பணியாற்றி உழைப்பால் உயர்ந்து உச்சப் பதவியாம் முதல்வராக அமர்ந்திருக்கும் அண்ணன் தளபதி அவர்கள் கோபாலபுர சிறை அலங்காரக் கடையிலிலிருந்து இளைஞர் மன்றம் தொடங்கி அதன் மூலம் அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளை கொண்டாடி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி அரசியலிலில் பயணிக்கத் தொடங்கிய பண்பாளர். அப்போதே அவர் கொடையாளி ஆகிவிட்டார்.

ஒரு பக்கம் முன்னேற்றப் பாதையில் சென்ற போராளி. அதனால் அறிஞர் அண்ணாவிடம் போராடி குறிப்பிட்டத் தேதி வாங்கி அண்ணாவால் அப்பனைப் போல் பிள்ளை பிடிவாதக்காரனாக இருக்கிறாயே என்று பாராட்டுப் பதக்கம் பெற்று பயணித்தக் காலத்தில் சந்தித்த அரசியல் புயல்கள், சூறாவளிகள் கொஞ்சமல்ல அனைத்திலும் வென்று ஆற்றல் மிக்க முதல்வரானார்.

அதற்கு முன்பே இளைஞரணி செயலாளராக இருந்து பணியாற்றிய போது நலிலிவடைந்த நண்பர்களுக்கும், தொய்வடைந்த தொண்டர்களுக்கும், ஓய்ந்து போன கழக மூத்தவர்க்கும் அவர் தந்த கொடை ஏராளம்! ஏராளம்!

இன்றோ உலகம் போற்றும் திட்டம் கண்டம் விட்டு கண்டம் தாண்டி கனடா நாடு உட்பட சில நாடுகள் தன் நாட்டில் அமல்படுத்த விரும்பும் அருமையானத் திட்டம் பள்ளிக்கு வரும் பச்சிளம் குழந்தைகள் பசியின்றி பயில காலை உணவுத் திட்டம். பசி போக்கும் பண்பை விட சிறந்த கொடை வேறு உண்டோ!

அதேபோல் இல்லமிருக்கும் தாய்மார்கள் எல்லாவற்றிற்கும் அடுத்தவரை அதாவது தம் உறவை நம்பியிருக்க வேண்டிய நிலையைப் போக்க பிள்ளைக்கு பென்சில் வாங்க வேண்டுமென்றாலும் சிரமப்படக் கூடாதென்று கலைஞர் உரிமைத் தொகையென்று மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம். என்னே சிந்தனை! இது ஒரு கொடையாளிக்குத் தான் வரும்.

கல்லூரிப் படிக்கும் மாணவிகள் மற்றும் மாணவர்கள் அதாவது தமிழ் புதல்வர்கள் உயர்கல்வி பயில மாதம் ஆயிரம் தருவது இது சாதாரணத் திட்டமா? பெற்றோரின் பெரும் சுமையைக் களைந்திடும் திட்டம். தன்னை நாடி வந்த பெரும் புலவனுக்கு என்னிடம் கொடுக்க ஒன்றுமில்லை இருக்கிறது எனது தலை கொண்டு சென்று கொடுங்கள் என் தம்பியிடம் கொடுப்பான் நிதி பெற்றுச் செல்லுங்கள் என்றானே தமிழ் மன்னன் குமணன். அந்த குமணனாகத் தான் தெரிகிறார் நம் கொடையாளி முதல்வர்.

முல்லைக்கு ஒரு கம்பு தந்தால் போதாதா தெரிந்தும் அவ்விடத்திலேயே கண்டவுடன் முல்லை படர தன் குதிரைகளை கழட்டி விட்டு தன் தேரையே தந்தானே வள்ளல் பாரி அதேபோல் மயிலுக்கு குளிர்காலம் என்றால் கொண்டாட்டம் தான் இருந்தாலும் தன் மக்களைப் போலவே மயிலையும் கருதி அதற்கு குளிருமே என்று போர்வை அளித்தானே பேகன் இவர்களெல்லாம் முட்டாள்களா? இல்லை இரக்க மனம் கொண்ட வள்ளல்கள். அதேபோல் பிறவியில் வழி வழியாக வந்த குணம் தான் இரக்கக் குணம்.

அந்த குணத்தை கலைஞரிடமிருந்து பெற்றதால் தான் நான் முதல்வன் திட்டம் மூலம் பல லட்சம் பேர் பயனடைய நிதி வழங்கி நிலை உயர்ந்து நிற்கிறார் நம்முதல்வர். இதுவும் அவரது கொடை உள்ளத்திற்கு தக்கச் சான்றாகும்.

விடியல் பயணம் மூலம் பேருந்துகளைப் பார்த்து மகிழ்ந்தவர்கள் பயணம் செய்யவும் கட்டணம் தேவையில்லை என்று அறிவித்து பலகோடி பயணம் செய்வதற்கு வழிவகுத்து வாழ்நாளில் ஒரு முறையாவது செல்ல முடியுமா என்ற இடங்களுக்கும், கோயில்களுக்கும் மகளிர்கள் சென்று வருவது மகிழ்ச்சியிலும் மகிழ்ச்சியன்றோ! இதற்குப் பெயர் தான் கொடை.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ் போன்ற படிப்பைப் பயில அறிவிருந்தும் அதற்கான நிதி தடையா! கூடவே கூடாது. குக்கிராமத்தைச் சேர்ந்தவர்களும் பட்டணம் வந்து படித்து வென்றிட படிப்படியாக தேர்வில் வெல்ல வெல்ல நிதி உதவி தந்து படிப்பது மட்டுமே உங்கள் வேலை பயில்வதற்கு உதவிகளைத் தருவது தன் வேலை என்ற நம்முதல்வர் செயல் சிறந்த கொடையன்றோ!

வல்லரசு நாடுகள் கூட தம் மக்களுக்கு கொடுக்க திணறும் திட்டம் தான் மக்களைத் தேடி மருத்துவம். சமீபத்தில் தான் 2 கோடியாவது நபருக்கு மருத்துவ உதவி தந்தார் நம் முதல்வர். மருத்துவமனை வரும் நோயாளிகளுக்கே மருந்து கொடுக்க முடியாத நிலை பல மாநிலங்களில் இருக்கும் போது இல்லம் தேடி சென்று இருக்கும் மக்களின் நோய் அறிந்து அதைப் போக்க சிகிச்சை தரும் சிறப்பான திட்டம். இது இயலுமா! சாத்தியமா! சற்றும் சிந்திக்காமல் முடியுமென்று மக்களைக் காக்கும் மகத்துவமான திட்டம் இது நம் முதல்வரின் மற்றுமொரு கொடையன்றோ!

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய
அணிச் செயலாளர்



இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும், இன்னுயிர் காக்கும் 48 திட்டம் இப்படி எழுதிக் கொண்டே போகலாம் அத்தனையும் மக்களுக்கான திட்டங்கள். மக்களுக்குப் பயனுரும் திட்டங்களைச் சிந்தித்து சிந்தித்து அறிவார்ந்த ஆச்சரியமூட்டும் திட்டங்களை ஒரு மன்னனால் மட்டுமே தர முடியும். அந்த மன்னன் நிச்சயம் ஒரு கொடை வள்ளலாகத் தான் இருக்க முடியும்.

அன்று மன்னன் இன்றோ முதல்வர். அத்தகைய நம்முதல்வர் நிச்சயம் ஒரு கொடை வள்ளல் தான். இவரது கொடையுள்ளம் பாட்டி அஞ்சுகம் அம்மையாரிடமிருந்தும் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடமிருந்து வந்ததென்பதை மறுப்பாரும் இருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. போராளி மட்டுமல்ல கொடையாளியுமே ஆவார் நம் முதல்வர் நல் தலைவர்.

தலைவர் கலைஞர் வழியில் அவரது பேரன் சகோதரர் உதயநிதி விளையாட்டுத் துறை அமைச்சராகியப் பின் தமிழ்நாட்டின் பெயர் இன்று உலக அளவில் பேசப்படுகிறது. இதுவும் அவரது கொடையுள்ளத்தின் சாதனை.

ஆம் தமிழ்நாட்டில் விளையாட்டுப் பயிற்சி பெற மைதானம் அவசியம். மைதானம் பொதுவாக மாவட்டத் தலைநகரங்களில், பெரு நகரங்களில் மட்டுமே இருக்கும். ஆனால் சகோதரர் உதயநிதி அவர்கள் பல கோடிகள் செலவில் நேரு ஸ்டேடியத்தை சீரமைத்தார். ஆசியா விளையாட்டுப் போட்டி நடத்துமளவு சென்னை மாநகரத்தை தயாராகியுள்ளார்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு விளையாட்டு மைதானத்தை கட்டிட உத்தரவிட்டு விரைவாக நடைபெற்று வருகிறது. செஸ் ஒலிம்பியாட் போட்டியை அரசு நடத்திக் காட்டியது. இதில் உலகளவிலான வீரர்கள் 2000 பேர் கலந்து கொண்டனர். அதற்கான செலவு பலகோடி ஆனது.

செஸ் வீரர் வெற்றியாளர் தமிழ்நாட்டைச் சேர்ந்த குகேஷிக்கு 5 கோடி தந்து ஊக்கமளித்தார். அமெரிக்கா சென்று உலக கேரம் போட்டியில் 3 தங்கம் வென்ற எளிய ஆட்டோ ஓட்டுநர் மகள் காசிமாவிற்கு 1 கோடியும், மித்ரா இரண்டு தங்கம் வென்றவருக்கு 50 லட்சம், நாகஜோதி 1 தங்கம் வென்றவருக்கு 50 லட்சம் வழங்கியுள்ளார். இதற்குப் பெயர்தான் தந்தையை போன்ற கொடையுள்ளம்.

பாரா ஒலிம்பிக்ஸில் வெள்ளி வென்ற துளசிமதிக்கு 1 கோடி, உயரம் தாண்டுதலிலில் வென்ற மாரியப்பனுக்கு 50 லட்சம், மனிஷா பேட்மிட்டன் வீராங்க னைக்கு 50 லட்சம், நித்யஸ்ரீ பாரா ஒலிம்பிக்ஸில் வெண்கலம் வென்றவருக்கு 50 லட்சம் என வழங்கிய கொடைவள்ளல் தான் சகோதரர் உதயநிதி ஸ்டாலிலின் அவர்கள். அது மட்டுமல்ல அவர்களைப் பலர் உலக நாடுகளுக்கு சென்று கலந்து கொள்ள நிதி குறையாக இருக்கக் கூடாதென்று பணம் வழங்கியவர் நம் துணை முதல்வர் அவர்கள்.

இப்படி எண்ணற்றோருக்கு விளையாட்டில் சிறந்து விளங்க பயிற்சி பெற இதுவரை யாரும் தராத போது பல கோடிகளை தந்த பரிசுத்தமான இதயம் பெற்ற கொடை வள்ளலாக விளங்கி வருபவர் தான் நம் துணை முதல்வர் சகோதரர் உதயநிதி ஸ்டாலிலின் அவர்கள்.

இவர்களது ஆளுமையைக் குறை கூறும் குதர்க்கவாதிகளுக்கு கொடையுள்ளத்தோடு தந்த கொடைகள் சிலவற்றை குறிப்பிட்டுள்ளோம் மற்றவர் சொல்லிலி வருவதல்ல கொடை உள்ளம் பிறவியில் வருவது தான்.

அண்ணாமலை தமிழ்நாடு திவாலாகி விட்டதாக கூறியுள்ளார். ஏற்கனவே ஆண்டவர்கள் விட்டுச் சென்ற கடன் 5 லட்சம் கோடி. தற்போது பெற்றுள்ள கடன் வெறும் 3.5 லட்சம் கோடி. அதுவும் தந்திடும் திட்டங்களுக்கு தரப்படுகிறது.

எங்களைக் குறை கூறும் பா.ஜ.கவினரை 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் உங்கள் ஆளுமையில் நீங்கள் வாங்கியுள்ள கடன் எவ்வளவு தெரியுமா 220 லட்சம் கோடி. ஆளுமையற்ற நீங்களா எங்களைக் குறை கூறுவது.

ஒரே நாடு ஒரே தேர்தலை எதிர்க்கதெம்பில்லை. அம்பேத்கரை இழிவுபடுத்தியவரை கண்டிக்க துணிவில்லை. அ.தி.மு.க. வினர் கூறுகின்றனர் தி.மு.க. அரசு தூங்குகிறதாம்! அதுவும் கும்பகர்ணனைப் போலவாம்.

புராணங்களையும் படித்து விட்டு பேசுங்கள் கும்பகர்ணனே ராமனை எதிர்க்க பாதியில் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கிறான் இதையெல்லாம் படித்ததால் தான் அறிஞர் அண்ணா கம்பரசம் எழுதினார். அண்ணா பெயரில் கட்சி வைத்துக் கொண்டு அரைகுறை அறிவோடு குற்றம் சாட்டாதீர்கள் உங்கள் கட்சியை காப்பாற்ற வழிபாருங்கள்.




காரைக்கால் மாநில தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் திருநள்ளார் ரோடு கப்பாப்பா காலனி அருகே நடைபெற்றது. இக்கூட்டத்தில் திராவிட இயக்க தமிழ் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை யாற்றினார். இதில் சுமோ கார்த்திகேயன், தெற்கு தொகுதி செயலாளர் தமிமுன் அன்சாரி, துரைக் கண்ணபிரான், வெற்றிச்செல்வன், சேகர், முருகானந்தம், பிரபு (எ) பிரித்திவிராஜ், கோவி.லெனின், ஆலங்குடி செல்வராஜ் நாகை நாகராசன் மற்றும் மாநிலக் கழக அமைப்பாளரும், தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம், நிரவி திருபட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மாநில செயற்குழு உறுப்பினருமான நாக தியாகராஜன், மாணவரணி அமைப்பாளர் பெரியார் ஜவகர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து –

# திருவில்லிபுத்தூரில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – கம்பம் செல்வேந்திரன் – இராணி ஸ்ரீகுமார் எம்.பி. சிறப்புரை!

விருதுநகர், பிப். 8 -

விருதுநகர் தெற்கு மாவட்டம் திருவில்லிபுத்தூர் நகர தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் இன்று (8.2.2025 - சனிக்கிழமை) வடக்கு ரதவீதியில் மாலை 6 மணியளவில் நகரச் செயலாளர் ஜி.ஜி.அய்யாவுப் பாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.

வரவேற்புரை நகர்மன்றத் தலைவர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தங்கம் ரவிக்கண்ணன் வழங்க உள்ளார். ஒன்றியச் செயலாளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மல்லி கு.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர் வத்றாப் க.முனியாண்டி, மாவட்ட அவைத் தலைவர், நகர்மன்ற துணைத் தலைவர் ச.செல்வமணி, பொதுக் குழு உறுப்பினர் சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், கழக தேர்தல் பணிக் குழுச் செயலாளர் கம்பம் செல்வேந்திரன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இராணி ஸ்ரீகுமார், தலைமை கழகப் பேச்சாளர் வரகூர் காமராஜ், மாவட்ட விளையாட்டு மேம்பட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.இரமேஷ் ஆகியோர் சிறப்புரை ஆற்ற உள்ளனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் குன்னூர்அ.சீனிவாசன், மாவட்ட துணைர் செயலாளர் ஆர்.வி.கே.துரை, பொதுக் குழு உறுப்பினர் ராஜேஸ்வரி, பேரூர் கழகச் செயலாளர் வத்ராப் மா.சிந்துமுருகன், மம்சாபுரம் பேரூர் கழகச் செயலாளர் அ.உதயசூரியன், எஸ்.கொடிக்குளம் பேரூர் கழகச் செயலாளர் அ.கருணை ஈஸ்வரன், வ.புதுப்பட்டி பேரூர்க் கழகச் செயலாளர் வி.கே.சாந்தாராம், சுந்தரபாண்டியம் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.சிட்டிபாபு, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சி.அன்னக்கொடி, மாவட்ட ஓட்டுநர் அணி அமைப்பாளர் ஆர்.டி.தங்கமாங்கனி,

மாவட்ட ஓட்டுநர் அணி அமைப்பாளர் பி.அய்யனார், ஆ.ராஜ்குமார், அரசு வழக்கறிஞர் எஸ்.திருமலையப்பன், தலைமைக் கழகப் பேச்சாளர் முகவை ராமர், மாவட்ட மகளிர் அணி தொண்டரணி அமைப்பாளர் க.ஜான்சி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆனந்தக் குமார், ஆர்.சரவணன் ஆகியோர் நன்றியுரை வழங்க உள்ளார்கள்.

ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து

# சிவகாசியில் மாபெரும் கண்டனப் பொதுக் கூட்டம்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு – மேயர் சங்கீதா இன்பம் – சிவ.முத்துவளவன் – கு.வாஞ்சிநாதன் சிறப்புரை!

சிவகாசி, பிப். 8 -

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசை கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் இன்று (8.2.2025 - சனிக்கிழமை) மாலை 06.00 மணியளவில் சிவகாசி பாவடித்தோப்பில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், தலைமை தாங்குகிறார். விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமை கழக பேச்சாளர் கவிஞர்.சிவ.முத்துவளவன், தலைமை கழக பேச்சாளர் கு.வாஞ்சிநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

சிவகாசி துணை மேயர் கே.விக்னேஷ்பிரியா காளிராஜன், மாநகர பகுதிச் செயலாளர்கள் ஆர்.எம்.காளிராஜன், எம்.ஏ.அப்துல் முத்தலிப், மாமன்ற உறுப்பினர் ஏ.ஞானசேகரன்,

மாநகர பகுதி கழகச் செயலாளர்கள் ஓ.வி.ஏ.கருணாநிதி பாண்டியன், ஜி.மாரீஸ்வரன், மாவட்ட அவைத் தலைவர் வி.தங்கராஜ், மாவட்ட துணைச் செயலாளர் கே.இராமமூர்த்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பால்ராஜ், கே.வி.கந்தசாமி, மாவட்ட துணைச் செயலாளர் எம்.தினேஷ்மாறன், மண்டலத் தலைவர் எஸ்.குருசாமி, மண்டல குழுத் தலைவர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சி.சேவுகன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ஜெ.சண்முகராஜன், மாவட்டப் பிரதிநிதி மாமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எல்.ஜெயினுலாபுதீன், மாமன்ற உறுப்பினர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஜி.வெயில்ராஜ், மாவட்ட சிறுபான்மையினர் நலப்பிரிவு அணித் தலைவர் கே.முகமது மதார் மரைக்காயர்,

சிவகாசி மாநகர சிறுபான்மையினர் நலப்பிரிவு அணி அமைப்பாளர் என்.அகமது ரபீக், முன்னாள் வைஸ் சேர்மன் பொன் சக்திவேல், 1ம் பகுதி கழகச் செயலாளர் அ.செல்வம், சிவகாசி மாநகர பொருளாளர் ஆர்.வெள்ளைத்துரைப் பாண்டியன், வர்த்தக அணி டி.வனராஜ், எம்.ஏ.சந்திரன், டி.செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் விவேகன்ராஜ், எஸ்.தங்கராஜா, ஒன்றியச் செயலாளர்கள் விவேகன் ராஜ், எஸ்.தங்கராஜா, முத்துலட்சுமி விவேகன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சாந்திகுமார், அருண் பிரகாஷ் ஆகியோர் நன்றியுரை வழங்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தினை சிவகாசி மாநகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் ஏற்பாடு செய்ய உள்ளார்.

மு.தென்னவன் தலைமை! மேயர் சே.முத்துத்துரை முன்னிலை! துணை மேயர் நா.குணசேகரன் வரவேற்புரை!

# மோடி அரசைக் கண்டித்து - காரைக்குடி மாநகரில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – எஸ்.எஸ்.பழநி மாணிக்கம் – இரா.மணிமுடி சிறப்புரை!

காரைக்குடி, பிப். 8-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் காரைக்குடி மாநகரில் ஓரவஞ்சனையாக நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இன்று (8.2.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் காரைக்குடி 5.00 மணியளவில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை வகிக்கிறார்.

மேயர் சே.முத்துத்துரை முன்னிலை வகிக்கிறார்.

துணை மேயர் நா.குணசேகரன் வரவேற்புரை யாற்றுகிறார்.

இப்பொதுக்கூட்டத்தில் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஒன்றிய முன்னாள் நிதித்துறை இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநி மாணிக்கம், வழக்கறிஞர் இரா.மணிமுடி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.


முன்னாள் அமைச்சர் ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., தலைமைச் கழகப் பேச்சாளர் பா.கணேசன், அ.கணேசன், த.சேங்கை மாறன், ஜோன்ஸ் ரூசோ, சுப.துரைராஜ், தா.இராமையா, அ.முகமது உள்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

சொ.கண்ணன் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பொ. வேதாசலம்

பிப்ரவரி 8 (1982)



தந்தை பெரியார் கொள்கையால் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழக உறுப்பினரானார். பின்னர் கழகம் துவங்கியபோது, அந்தநாள் முதல் இறுதி வரை கழக உறுப்பினராக விளங்கினார்.

மாதவரம் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

மூலக்கடை, மாதவரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் கழகம் வளர்த்தவர். மிசா சிறைவாசம் உட்பட பத்து முறை சிறைக்கு சென்றவர்

“சிரித்துக்கொண்டேயிருக்கும் முகம்! குள்ள உருவம்! எளிய தோற்றம்! நிமிர்ந்த நோக்கு! சின்னத் தேர் ஒன்று அசைந்து வருவது போன்ற அமைதியான நடை” என தலைவர் கலைஞர் அவர்கள் மாதவரம் வேதாசலம் மறைந்தபோது அந்தோ! மாதவரம் வேதா! என கலைஞர் கடிதத்தில் சிறப்பித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**